பக்கங்கள்:-22

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 07 | சனிக்கிழமை | 20.04.2024 | அதிர்வு 263

## ஊஞ்சல் கயிறு கழுத்தில் இறுகி சிறுவன் மரணம்!

### மூதூரில் பெருந்துயரம்

திருகோணமலை – மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோப்பூர் பகுதியில் ஊஞ்சல் கயிறு கழுத்தில் இறுகிச் சுற்றியதில் சிறுவன் ஒருவர் பரிதாபமாக 06

### ராஜபக்ஷக்கள் பக்கம் நிற்கும் வரை

# தமிழ் மக்களின் ஆதரவை ரணில் பெறவே முடியாது!



### சஜித் தரப்பு கூறுகின்றது

ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷக்கள் பக்கம் நிற்கும் வரை அவரால் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் மக்களின் ஆதரவைப் பெற முடியாது என்று சஜித் அணி பக்கம் தாவியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"நாட்டில் உள்ள வாக்காளர்களில் 40 வீதமானோர் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கவில்லை. 60 சதவீத வாக்குகளை வைத்துத்தான் 06

# ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும்!

### ரணில் உறுதி என்கிறார் வியாழேந்திரன்



**இலங்கையில் முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்படும் என்றும், இந்த விடயத்தில் ரணில் விக்கிரமசிங்க உறுதியாக வுள்ளார் என்றும் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.**

**மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.** 06

### உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்:

## அருட்தந்தை சிறில் காமினி நேற்று 5 மணித்தியாலங்கள் வாக்குமூலம்



குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று முன்னிலையாகியிருந்த கொழும்பு பேராயர் இல்லத்தின் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினியிடம் சுமார் 5 மணித்தியாலங்கள் விசாரணை நடத்தி வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக விடுக்கப்பட்ட அழைப்புக்கிணங்க அருட்தந்தை சிறில் காமினி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று முன்னிலையாகியிருந்தார். 06




இன்றைய பத்தியின் சரக்கு முழுமையாக என்னுடையதன்று. தென்னிலங்கை ஊடகவியலாளர் ஒருவரின் கருத்துடன் சுவைக்காக மேலும் சில தகவல்களை சேர்த்துத் தருகிறேன்.

1960 இல் பிரதமர் தஹநாயக்கவுக்கும் அவரது அணியினருக்கும் நேர்ந்த கதிதான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் அவரது குழுவினருக்கும் நேரலாம் என்கிறார் அவர்.

1959 செப்டம்பர் 26 ஆம் திகதி பிரதமர் எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா சுட்டுக் கொல்லப்பட்டார். அதற்கு சில நாள்களுக்கு முன்னர் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் வைத்து – நஞ்சு கலந்ததாகக் கூறப்படும் – ஒரு கோப்பைப் பாலை அருந்தியமையால் ஆளும் தரப்பின் அடுத்த மட்ட 06

# தூக்கில் தொங்கிய நிலையில் முதியவர் ஒருவரின் சடலம் மீட்பு



நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலிபண்ட் தோட்டத்தில் முதியவர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

75 வயதுடைய பெருமாள் வடிவேல் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு வீட்டில் பின்புறத்தில் உள்ள குளியலறையில் தூக்கில் தொங்கிய நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் பெண்கள் சுகநல நிலையம் நாளை ஞாயிறன்று திறந்து வைப்பு

சிவபூமி அறக்கட்டளை, யாழ். போதனா வைத்திய சாலை, மருத்துவ பீடம் என்பன இணைந்து உருவாக்கியுள்ள பெண்கள் சுகநல நிலையத் திறப்பு விழா நாளை 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இலக்கம் 61, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள சிவபூமி இல்லத்தில் இத்திறப்பு விழா நிகழ்வு இடம்பெறவுள்ளது.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த வைத்திய நிபுணர் அ.பாலசுப்பிரமணியம் சாவித்திரிதேவி தம்பதியினர் இந்தக் கட்டடத்தை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணி எஸ். ஆர்.கே. கனக ஈஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

வரவேற்புரையை யாழ். போனா வைத்தியசாலையில் வைத்திய நிபுணர் ந.சரவணபவ நிகழ்த்துவார்.

ஆசி உரையைச் சுப்பிரமுனிய கோட்ட முதல்வர் தொண்டு நாத சுவாமிகள் நிகழ்த்துவார்.

தொடக்க உரையை யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி நிகழ்த்துவார்.

வாழ்த்துரைகளை யாழ். பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சி. ஸ்ரீ சற்குணராசா, மருத்துவ பீடாதிபதி பேராசிரியர். இ.சுரேநந்திரகுமார் ஆகியோர் நிகழ்த்துவார்.

அறிமுக உரையை யாழ். மருத்துவ பீட விரிவுரையாளர் வைத்தி ய நிபுணர் பா.பாலகோபி நிகழ்த்துவார்.

நன்றியுரையை யாழ். மருத்துவ பீட விரிவுரையாளர் வைத்திய நிபுணர் சி.ரகுராமன் நிகழ்த்துவார்.

# சைவ சமயத்தவர்களுக்கு ஈடில்லாத பேரிழப்பாகும்!

## முத்துக்குருக்களின் மறைவுச் செய்தியில் ஆறுதிருமுருகன்



நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய உற்சவ காலப் பிரதம குருவும் சிறந்த வேத வித்தகருமாகிய வடகோவை சிவஸ்ரீ ப. முத்துக்குருக்களின் மறைவுச் செய்தி அறிந்து மிகுந்த கவலை அடைகின்றேன்.

இவ்வாறு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

சிவாகம நெறிகளை நன்கு கற்ற பெருமகன். இந்தியாவில் குருகுலக் கல்வியையும் பட்டப் படிப்பையும் நிறைவு செய்து, தனது தந்தை வழியில் பல ஆலயங்களின் கும்பாபிஷேகங்களை நெறிப்படுத்தியவர்.

ஆலயக் கிரியை நெறிகளில் தெளிந்த அறிவுடைய குருவாக விளங்கியமையோடு, நற்பண்புகள் நிறைந்த மனிதனாக எல்லோராலும் மதிக்கப்பட்டவர்.

அன்னாரது பிரிவு சைவ சமயத்தவர்களுக்கு ஈடில்லாத இழப்பாகும். குருக்களின் ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போம். – என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சகோதரியைத் துஷ்பிரயோகம் செய்ய முற்பட்ட இளைஞர் கைது

## மஸ்கெலியாவில் சம்பவம்

23 வயது உடைய வளர்ப்பு மகன் ஒருவர் தனது சகோதரியை துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் மஸ்கெலியா பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்பு அதிகாரியால் கைது செய்யப்பட்டார்.

நேற்று ஹட்டன் நீதிமன்றத்தில் நீதிவான் ஏ.ஏ.பரீட் முன்னிலையில் சந்தேகநபர் ஆஜர்படுத்த பட்ட போது நீதிவான் சந்தேக நபரை எதிர் வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் மாலை சம்பந்தப்பட்ட சகோதரி மூலம் கிடைக்க பெற்ற முறைப்பாட்டைத் தொடர்ந்து சந்தேக நபரைக் குற்றத் தடுப்பு பொலிசார் கைது செய்து விசாரணை நடத்தினர்.

# சிறுமியின் மரணத்திற்கு நீதி கோரி தரணிக்குள மக்கள் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம்!



(கே.வசந்தன்)

அண்மையில் வவுனியாவில் உயிரிழந்த சிறுமியின் மரணத்திற்கு நீதி கோரி நேற்றுத் தரணிக்குளம் கிராம மக்கள் ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 17 ஆம் திகதி தரணிக்குளம் கிராமத்தில் வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் 17 வயதுடைய சிறுமியின் சடலம் மீட்கப்பட்டிருந்தது.

நேற்றைய தினம் இறுதி கிரியைகள் இடம்பெற இருந்த வேளை சிறுமியின் இறப்பில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்து சிறுமியின் வீட்டிற்கு முன்பாக கிராம மக்கள் மற்றும் உறவினர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

அத்தோடு குறித்த சிறுமியின் மரணத்திற்கு சிறிய தந்தையாரே காரணம் எனவும் தெரிவித்து போராட்டம் ஒன்றை முன்னெடுத்தமையுடன் மரணித்த சிறுமியின் வீட்டில் இருந்து பேரணியாக ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு சென்று பொலிஸ் நிலையத்தையும் முற்றுகையிட்டமையுடன் வீதியை மறித்தும் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

இதன் போது "சிறுமியின் கொலைக்கு நீதி வேண்டும்", "பெண் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு வேண்டும்", "சதுமிதாவின் மரணத்திற்கு நீதி வேண்டும்" என்பன போன்ற பதாதைகளை தாங்கியவாறும், "கசிப்பு மற்றும் போதைவஸ்தை இல்லாமல் செய்!", "நீதி வேண்டும், நீதி வேண்டும் மரணித்த, சிறுமியின் மரணத்திற்கு நீதி வேண்டும்!" என்ற கோசங்களை எழுப்பியவாறும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒரு மணித்தியாலம் வரை இடம்பெற்ற இந்த்ச் ஆர்ப்பாட்டம் காரணமாக தாண்டிக்குளம், இரணைஇலுப்பைக்குள வீதிப் போக்குவரத்துத் தடைப்பட்டமையால் அவ்வீதியின் ஊடக பயணம் செய்யும் மக்கள் பாதிப்புக்குள்ளாகினர்.

இதன்போது கருத்து தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் –

போதைப்பொருள் பாவனையாலே இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது. நாங்களும் வேலைக்கு சென்று 6 மணி போல் வரும் போது எங்களிற்கு பாதுகாப்பு இல்லை. தற்போது சதுமிதாவிற்கு நடந்த பிரச்சினைதான் இன்னொரு சிறுமிக்கும் நடைபெறும்.

குறித்த சிறுமியின் மரணத்திற்கு நீதி வேண்டும்.18 வயதிற்குட்பட்ட சிறுமியை துஷ்பிரயோகம் செய்தமையாலே மன ரீதியாக பாதிக்கப்பட்டிருக்கலாம். அத்துடன் அந்தச் சிறுமியை சிறிய தந்தையாரே துஷ்பிரயோகம் செய்துள்ளார் எனக் கூறப்படுகின்றது. சிறுமியின் மரணத்திற்கு நீதி வேண்டும். – எனத் தெரிவித்தனர்.

ஏற்கனவே சந்தேகத்தின் பேரில் சிறுமியின் சிறியதந்தையை ஈச்சங்குளம் பொலிஸார் கைது செய்துள்ள நிலையில், அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவார்கள் என்றும், இச்சம்பவத்துடன் தொடர்புடைய ஏனையவர்களையும் தாங்க கைது செய்வார்கள் என்றும், பொலிஸார் தெரிவித்தமயை அடுத்து ஆர்ப்பாட்டகாரர்கள் கலைந்து சென்றனர்



# இலங்கையில் எம்.டி. 2 வகை அன்னாசியை செய்கை பண்ணுவதற்கான ஆய்வுகள் வெற்றி

உலகில் மிகவும் பிரபலமான எம்.டி.2 வகை அன்னாசிப் பழத்தை இலங்கையில் செய்கை பண்ணுவதற்கான பரிந்துரைகளை உடனடியாக வழங்குமாறு விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர விவசாய திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

விவசாயத்துறை நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ், இலங்கையில் எம்.டி.2 அன்னாசியை செய்கையிடுவதற்கான ஆய்வுகள் வெற்றியளித்துள்ளன என விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த வகை அன்னாசியை செய்கையிட விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.




# புதிய மின்சார சட்டமூலத்திற்கு எதிராக எவரும் நீதிமன்றுக்குச் செல்ல முடியும்!

## எரிசக்தி அமைச்சர் தெரிவிப்பு

புதிய மின்சார சட்டமூலத்திற்கு எதிராக எவரும் நீதிமன்றத்தை நாட முடியும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

எவ்வாறாயினும், மின் கட்டணத்தை குறைப்பதே புதிய மின்சார சட்டமூலத்தின் நோக்கம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கான இரண்டு வழிமுறைகளில் இரண்டாவதான நிர்வாகச் செலவைக் குறைப்பதனையே தற்போது மேற்கொள்ளவுள்ளோம் என அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதன் முதலாவது வழிமுறையான மின்னுற்பத்தி செலவைக் குறைப்பதற்கு, எரிபொருளில் இயங்கும் மின்னுற்பத்தி நிலையங்களுக்கு பதிலாக மீள்புதுப்பிக்கத்தக்க மின்சக்தித் திட்டங்களை எதிர்காலத்தில் கொண்டுவரவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முறையான ஆய்வுகள் மற்றும் விழிப்புணர்வின்றி இந்த சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

# மரண அறிவித்தல்



மண்ணுலகில்
02 . 11 . 1934

விண்ணுலகில்
11 . 04 . 2024

## சூசைப்பிள்ளை பெஞ்சமின் அருமைநாயகம்

**பொறியியலாளர்**
**(Chairman - Arumainayagam Associates, Pedro Coolers Ltd, Pedro Export Ltd)**

வல்வெட்டித்துறை நெடியகாட்டைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியையும், தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சூ.பெஞ்சமின் அருமைநாயகம் அவர்கள் கனடாவில் கடந்த 11.04.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை (சின்னத்தம்பு) - விறிசிற்றம்மா (மங்களம்) தம்பதியினரின் சிரேஸ்ர புதல்வனும், யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதி காலஞ்சென்றவர்களான கிறிஸ்ரியன் - யோசெபின் தம்பதியினரின் மருமகனும், மேள் திரேஸ் புஸ்பராணியின் அன்புக்கணவரும், இமானுவல் இளங்கோ, மைக்கல் இளஞ்சேரன், கிறிஸ்ரலின் வாசுகி ஆகியோரின் அன்புத் தந்தையும், பெனிற்றா இளஞ்சேரன், யேசன் பிறவுன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பியானா சங்கீதா, பெஞ்சமின் திலீபன், அகிலா அஞ்சலி, நைலா அகிலா, றூபி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற மேரிராணி ஜெயராஜா மற்றும் சேவியர் குலநாயகம், காலம்சென்ற மேரி அமலோற்பவநாயகி ஜெயநாதன் மற்றும் விக்ரர் தனிநாயகம் (அவுஸ்திரேலியா), திருமதி மேரி நிர்மலா அருச்சுனா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான லெறி, பவளராஜா மற்றும் திருமதி லினெற் இரத்தினசிங்கம், காலஞ்சென்ற அமிர்தராஜா மற்றும் யோகராஜா, திருமதி இமாகுலெற் ஜோர்ஜ் நீக்கிலஸ், சுகிர்தராஜா, குணராஜா, திருமதி சென் ஜீன் ஈஸ்வரி டொமினிக் ராஜன் மற்றும் காலஞ்சென்ற R.E.C. ஜெயராஜா மற்றும் திருமதி தேவஜோதி குலநாயகம், காலஞ்சென்ற அன்ரனி ஜெயநாதன் மற்றும் Dr.சுசிலா தனிநாயகம் (அவுஸ்திரேலியா), அருச்சனா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் (19.4.2024) வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி தொடக்கம் 9.00 வரையும், 20.4.2024 சனிக்கிழமை காலை 9.00 தொடக்கம் 10.00 வரையும், St.John's Dixie Cemetery & Crematorium இல் பார்வைக்காக வைக்கப்படும். நல்லடக்க ஆராதனை 20.4.2024 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கனடா மிசிசாகாவில் உள்ள மாத்தா மரியாள் தேவாலயத்தில் நடைபெற்று அசும்சன் கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் இடம்பெறும். இவ்வறிவித்தலை உற்றார்.உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
சூ.சேவியர் குலநாயகம் - சகோதரன் - 0778617740
இமானுவெல் இளங்கோ - மகன் - 0014167559655

36, மார்ட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

(CS54757) J-1



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிரேஷ்ட தலைவராக இருந்த அமைச்சர் சி.பி.டி.சில்வா சுகவீனமுற்று மேலதிக சிகிச்சைக்காக லண்டனுக்கு கொண்டு விரையப்பட்டார். அந்தச் சமயத்தில் பண் டாரநாயக்கா கொல்லப்பட, பிரதமர் பதவி தஹநாயக்காவின் மடியில் வந்து விழுந் தது - கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு ஓட, ஜனாதிபதிப் பதவி ரணிலின் மடியில் விழுந்த மாதிரி.

1959 செப்டம்பர் கடைசியில் நியு யோர்க்கில் ஐ.நா. சபைக் கூட்டத்தில் பங்கு பற்றுவதற்காக அங்கு செல்லவிருந்த பிரதமர் பண்டாரநாயக்கா, தாம் நாட்டில் இல்லாத சமயத்தில் பதில் பிரதமராக தஹநாயக்காவை நியமிக்கும்படி ஆளு நர் ஒலிவர் குணதிலகவுக்கு கடிதம் எழுதி யிருந்தார். அச்சமயத்தில் பண்டார நாயக்கா கொல்லப்பட, அவரின் கடிதப்படி தற்காலிக பிரதமர் பதவிக்கு தஹநாயக் காவை அழைத்தார் ஆளுநர்.

ஆட்சிக்கு வந்து ஓரிரு வாரங்களி லேயே அவரது அரசு நெருக்கடியை எதிர்கொண்டது. நம்பிக்கை இல்லா பிரரே ணையில் 48க்கு 43 என்ற கணக்கில் அரசு தப்பிப் பிழைத்தாலும் ஆட்சியில் நீடிக்க முடியவில்லை.

1959 டிசம்பர் 5ஆம் திகதி நாடாளு மன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்த லுக்கு அழைப்பு விட ஆளுநருக்குப் பரிந்துரைத்தார் பிரதமர் தஹநாயக்க.

அச்சமயத்தில், தான் இருந்த சுதந் திர கட்சியைத் துறந்து, திடீரென 'இலங்கை ஜனநாயகக் கட்சி' என்று ஒரு புதிய கட் சியை உருவாக்கி அறிவித்தார் தஹநா யக்க. அதில் இணைய மறுத்த சு.கவி னரை அமைச்சரவையில் இருந்து வெளி யேற்றினார். தமது கட்சியில் சேர்ந்த ஐவருடன் காபந்து அமைச்சரவையைத் தொடர்ந்தார்.

1960 மார்ச் தேர்தலில் அவரும் அவ ரது கட்சியினரும் முற்றாகத் தோல்விய டைய, அவரால் அமைச்சரவையில் இருந்து வெளியேற்றப்பட்ட அனைத்து சு.கவினரும் வென்றனர்.

இந்தத் தகவலைத்தான் அந்த ஊடக வியலாளர் தெரிவித்திருக்கிறார்.

அவருக்கும் அவரது கட்சி அமைச்சர்க ளுக்கும் நேர்ந்த கதிதான் இப்போது ரணி லுக்கும் அவருடன் புதுக் கூட்டு அமைத் திருக்கும் அவரது சக அமைச்சர்களுக் கும் நேரும் என்பது அந்த ஊடகரின் கணிப்பு.

அது நடந்தாலும் நடக்கலாம். ஆனால் அந்த ஊடகர் கூற மறந்த - அல்லது மறைத்த - ஒரு விடயத்தை நான் குறிப் பிட்டுத்தானாக வேண்டும்.

1960 மார்ச் தேர்தலில் தோற்ற தஹ நாயக்க, அடுத்த நான்கு மாதத்தில், 1960 ஜுலையில் நடைபெற்ற தேர்தலில் வென்று, அடுத்த ஐந்து வருடங்கள் எதிர்க் கட்சியில் எம்.பியாக இருந்தார். அதன் பின் 1965 முதல் 1970 வரை டட்லி சேன நாயக்காவின் அரசில் உள்நாட்டு அலு வல்கள் அமைச்சராகப் பணிபுரிந்தார். மீண்டும் 1970 முதல் 77 வரை எதிரணி எம்.பியாக அமர்ந்தார். 1979 முதல் 1988 வரை எம்.பியாகத் தொடர்ந்த அவர் 1986 முதல் 1988 வரை கூட்டுறவு அமைச்சராக வும் பணிபுரிந்தார்.

பிரதமர் பதவியை ஏற்றுக் குறுகிய காலத்தில் அதை இழந்த பின்னரும், 28 ஆண்டுகள் அவருக்கு அரசியல் வாழ்வு காத்திரமாக இருந்தது.

ஜனாதிபதிப் பதவியை விட்டு ரணில் விக்கிரமசிங்க இறங்க வேண்டி வந் தால், அதற்குப் பின்னர் அவர் நிலை எப்படியோ.......? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!

# தலைமறைவாக வாழ்ந்த மரண தண்டனைக் கைதி 35 வருடங்களுக்குப் பின்னர் மாட்டினார்!

## 24ஆம் திகதி வரை விளக்கமறியல்

கொலைச் சம்பவம் தொடர்பில் நீதி மன்றத்தால் மரண தண்டனை விதிக் கப்பட்டு 35 வருடங்களாகத் தலைமறை வாக இருந்த நபர் சி.ஐ.டி.யினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துருகிரிய, பனாகொட பகுதியி லேயே 1989 ஆம் ஜனவரி 13 ஆம் திகதி கொலைச் சம்பவம் இடம்பெற்றுள் ளது.

மின்சார சபையின் பொறியாளர் ஒருவரைக் கொலை செய்து, உட லைத் துண்டுத் துண்டாக வெட்டி மறைத்து வைத்த சம்பவம் தொடர பில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள் ளார்.

கைது செய்யப்பட்ட நபர் ஹோமாகம நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட பின் னர், எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் 68 வயதுடையவர் எனவும், அவர் தனது தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழில் தனது அடையாளத்தை அடையாளம் காண முடியாத வகையில் மாற்றியமைத்



துள்ளார் எனவும் விசாரணை அதிகா ரிகள் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பிரதான சந்தேகநபரின் மனைவியும் தலைமறைவாக வாழ்ந்த நிலையில் கடந்த பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1990 ஆம் ஆண்டில் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தாலும், பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னரே தலைமறை வாகியுள்ளனர். நபர்கள் இல்லாமல் வழக்கு விசாரணை இடம்பெற்று வந்த நிலையில் மரண தண்டனை விதிக்கப் பட்டது.

## தமிழ் மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கருத்துக் கணிப்புகள் வருகின்றன. அது உறுதியான முடிவாக அமை யாது.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தில் வாழும் தமிழ் மக்கள், ரணில் விக்கிரம சிங்க, ராஜபக்ஷக்கள் பக்கம் நிற்கும் வரை அவருக்கு ஆதரவு வழங்கமாட் டார்கள். எனவே, வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் உள்ள மக்களுள் பெரும் பாலானவர்கள் ஐக்கிய மக்கள் சக்தி பக்கம்தான் தற்போது நிற்கின்ற னர்.

ரணில் விக்கிரமசிங்க எப்படித்தான் முயற்சித்தாலும் ராஜபக்ஷக்களுடன் இருக்கும் வரை அவரின் முயற்சி வெற்றிய ளிக்காது.

தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் என்னைப் போன்ற அரசியல்வாதிகளுக்கு வரவேற்பு உள்ளது. அம்மக்களின் உரி மைக்காக முன்னின்றவன் நான். அத னால் சிங்களப் புலி என்றுகூட முத்திரை குத்தினர்." - என்றார்.

## அருட்தந்தை சிறில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த விடயம் தொடர்பில், அவர் ஏற்க னவே குற்றப் புலனாய்வுத் திணைக்களத் தில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கியிருந்த நிலையில், மீண்டும் குறித்த திணைக்களத்தால் அவ ருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந் தது.

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடத்தப்பட்டு, நாளையு டன் (21) 5 வருடங்கள் பூர்த்தியாகின் றன.

இந்தநிலையில், இதனை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பல அஞ்சலி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள் ளன.

## ஜனாதிபதித் தேர்தலே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழர் ஒருவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட வேண்டுமாயின் இலங்கை யில் உள்ள சகல சிறுபான்மையின மக்க ளும் ஒருவரை ஏகமனதாகத் தெரிவு செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித் தார்.

எனினும், தமிழர் ஒருவர் ஜனாதிப தியாக வருவது தற்போதைய நிலை மையில் சாத்தியம் இல்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

## ஊஞ்சல் கயிறு கழுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் பாலத்தோப்பூர் பகுதியைச் சேர்ந்த 8 வயதுடைய மர்சூன் அஷ்பாக் எனும் சிறுவனே உயிரிழந்துள்ளார்.

இந்தப் பெருந்துயரச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள் ளது.

மேற்படி சிறுவன் வீட்டில் கட்டப்பட்டி ருந்த ஊஞ்சலில் தனியாக ஆடிக் கொண் டிருந்த சந்தர்ப்பத்தில், ஊஞ்சல் கயிறா னது சிறுவனின் கழுத்தில் இறுகியது என வும், அந்தச் சந்தர்ப்பத்தில் அவ்விடத்தில் யாரும் இல்லாததால் சிறுவன் உயிரிழந் தார் எனவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள் ளது.

உயிரிழந்த சிறுவனின் ஜனாஸாவை மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிபதி தஸ் னீம் பௌசான் நேற்றுமுன்தினம் இரவு சம்பவம் இடம்பெற்ற வீட்டுக்குச் சென்று பார்வையிட்டார்.

விசாரணைகளின் பின் ஜனாஸா பிரேத பரிசோதனைக்காக திருகோண மலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகளை மூதூர் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.



# சுற்றுலாப் பயணிகளின் தங்குமிடங்களை ஒழுங்குமுறைக்கு உட்படுத்த நடவடிக்கை

## உரிய வழிகாட்டுதல்கள் வழங்கினார் ஆளுநர்

சுற்றுலாப் பயணிகளுக்கு வீடுகளில் தங்குமிட வசதிகளை வழங்குவோருக்கான வருமான அதிகரிப்புக்குரிய பொறி முறையை தயார் செய்யுமாறு வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்திருக்கின்றார்.

சுற்றுலாப் பயணிகளுக்கும், வெளிமாவட்டங்களில் இருந்து வருவோருக்கும் தங்குமிட வசதிகளை ஏற்படுத்தி கொடுப்போர், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றில் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பில், ஆளுநர் செயலகத்தில் நேற்று விசேட கூட்டம் நடைபெற்றது. இதன்போது வடக்கு மாகாணத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்துவது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காக சில பகுதிகளில் மக்கள் தமது வீடுகளிலேயே அறைகளை வழங்குகின்றமை யோடு, முழுமையான வீட்டையும் நாள், கிழமை மற்றும் மாத அடிப்படையில் வாடகைக்கு வழங்குகின்றனர் எனச் சுற்றுலாத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், அவர்கள் எந்தவொரு திணைக்களத்திலும் பதிவுகளை மேற்கொள்வதில்லை எனவும், தங்குமிடங்களின் வசதிகள் தொடர்பில் கரிசனை கொள்வதில்லை எனவும் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

அவ்வாறானவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்கி, அவர்களது வருமானத்தை அதிகரிக்கும் வகையில் ஊக்குவிப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண ஆளுநர் இதன்போது கூறினார்.

பதிவு செய்யாது தங்குமிட வசதிகளை வழங்குவோர் தொடர்பில் தகவல்களைத் திரட்டி, அவர்களின் சேவை களை ஒழுங்குப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் கூறினார்.

அத்துடன் சட்ட பொறிமுறைக்குள் அவ்வாறானவர்கள் உள்வாங்கப்படும் போது, அவர்களின் தங்குமிட வசதிகள் தொடர்பில் இணையத் தளங்களில் ஊக்குவிப்பு நடவடிக் கைகளை மேற்கொண்டு, அவர்களின் வருமானத்தை அதி கரிக்கத் தேவையான பொறிமுறையை வடிவமைக்குமாறும் ஆளுநர் அறிவுறுத்தினார்.

# தெற்கு இனவாதத் தலைவர்களிடம் விலைபோனவர்களே தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரத்தை தூண்டுகின்றனர்

## ஈ.பி.டி.பியின் ஊடகப் ஸ்ரீரங்கேஸ்வரன் குற்றச்சாட்டு

தென்னிலங்கையில் இருக்கும் சில இனவாத தலைவர் களுக்கு விலைபோயுள்ளவர்கள் – அவர்களது பணப்பெட்டி களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கம் தரப்பினரே – தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரத்தை தூண்டி அதற்கு தூபமிட் டுக்கொண்டிருக்கின்றார்கள் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

அனைத்து தமிழ் கட்சிகளும் ஓரணியாக ஒன்றிணைந்து ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை முன்நிறுத்தி தமிழ் மக்களின் முழுமையான வாக்குகளையும் அவருக்கு வாழங்கினாலும் தமிழ் மக்களின் சார்பில் அவர் வெற்றி பெற்று ஜனாதிபதியாக வரமுடியாது.

அதனடிப்படையில் தமிழ் மக்களின் அரசியல் களத்தில் இருக்கும் சில சதியாளர்களின் திட்டமாகவே ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரபின் பொது வேட்பாளர் முன்மொழிவு இருக்கின்றது. இதேநேரம் அது தமிழ் மக்களின் நலன் சார்ந்தோ அன்றி அரசியல் தீர்வுகளுக்கான வழியை காட்டும் ஒன்றாகவோ ஒருபோதும் இருக்கப்போவதில்லை.

இதேநேரம் நாட்டில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதற் கான ஏதுநிலைகள் காணப்பட்டு வருகின்ற நிலையில், தமிழ் தேசியம் பேசும் அரசியல் தரப்பினரிடையே தமிழ் பொது வேட்பாளர் தொடர்பாக பேசப்பட்டு வருகின்றது. அதுமட்டுமல்லாது பல்வேறுபட்ட கருத்துக்களும் அவர்க ளால் கூறப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களிலும் தமிழ் மக்களின் சார்பில் சிலர் போட்டியிட்டுள்ள வரலாறுகள் இருக்கின்றன.

இதேநேரம் 2010 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னரான ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டபோது புலிக ளின் ஏற்பாட்டில் தெரிவுசெய்யப்பட்ட 22 உறுப்பினர்களும் இணைந்து, தமிழ் மக்களை அழித்தவர் எ அவர்களாலேயே கூறப்பட்ட சரத் பொன்சாவுக்கு வாக்களின்க்குமாறு தமிழ் மக்களிடம் கோரியிருந்தனர். குறிப்பாக யுத்தம் நிறை வுக்கு வந்து ஓராண்டுக்குள்ளேயே இதை அறிவித்திருந்தார் கள்.

அதேவேளை கடந்த கால தேர்தல்களில்களின் போதும் தமிழ் அரசியல் கட்சிகளால் குறிப்பாக தமிழ் மக்களின் பிரதி நிதிகள் தாங்கள்தான் எனக் கூறியவர்களால் சஜித் பிரேம தாஸ போன்றோருக்கும் ஆதரவுகள் கொடுக்கப்பட்டன.

அது மாத்திரமின்றி இன்றைய ஜனாதிபதியை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக பணப்பெட்டிகள் கைமாறிய கதை களும் அனைவருக்கும் தெரிந்ததே.

இவ்வாறானவற்றை எல்லாம் செய்த இவர்கள் இன்று பொது வெட்பாளரை முன்னிறுத்துமாறு கூறுவதானது கடந்த காலங்களில் அந்த சூழ்நிலையில் மனநிலை எவ்வாறிருந்தது? அல்லது அரசியல் நிர்வாக தெளிவற்ற நிலையிலிருந்தார்களா? அல்லாது நிர்வாக ஞானம் இல்லா திருந்தார்களா? என்ற கேள்விகளை இன்று பொது வெளி யில் தோற்றுவித்துள்ளது.

அந்தவகையில் இன்று இவ்வாறான செயற்பாட்டை முன்னெடுக்கும் நோக்கம் தென்னிலங்கையில் இருக்கும் சில இனவாத தலைவர்களுக்கு விலைபோய், அவர்களது பணப்பெட்டிகளுக்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்கம் தரப்பினரே இந்தஒ பொது வேட்பாளர் விவகாரத்தை தூண்டி அதற்கு தூபமிட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

அந்தவகையில் இந்த பொது வேட்பாளர் விடையத்தில் தமிழ் மக்கள் ஏமாராது இருப்பது அவசியமாகும். இதே வேளை ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க போட்டி யிரும் சூழ்நிலை இருக்குமாயின் அவர் அதிகளவான வாக்குகளை பெற்று வெற்றியீட்டுவதற்கான சூழ்நிலையும் காணப்படுகின்றது. இவ்வாறான ஒரு நிலையில்தான் ரணி லின் வெற்றியை கேள்விக்குட்படுத்தும் செயற்பாடை நிறைவு செய்யயும் சதியாளர்களின் கையாளர்களாகவே இந்தப் பொது வெட்பாளர் விடயததை கையிலெடுத்துள்ள தமிழ் தரப்பினனது செயற்பாடு உள்ளது. – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சு.கவின் தலைவிதி மன்றில்!

ஏற்கனவே இப்பத்தியில் சுட்டிக் காட்டியபடி சுதந்திரக் கட்சியின் இழுபறி நடு வீதிக்கு வந்துவிட்டது.

இனி, அக்கட்சிக்கு விடிவு யாது, வழி எது என்பதை நீதிமன்றில்தான் முடிவு கட்ட வேண்டி இருக்கும்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆசி, ஆதரவுடன் ஒரு குழுவும், இதுவரை கட்சியின் தலைவராக இருந்த மற்றொரு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஓர் அணியும் கட்சியின் நிர்வாக அதிகாரமும் உரித்தும் தங்களுடையதே என்று மல்லுக்கட்டி நின்றாலும், முடிவு விரைந்து கிட்டுவதற்கான சாத்திய கூறுகளே தென்படவில்லை.

ஏற்கனவே கட்சியின் தவிசாளராக மைத்திரிபால சிறிசேன செயற்படுவதற்கு இடைக்காலத் தடை விதித்துள்ள கொழும்பு மாவட்ட நீதிமன்றம், கட்சித் தலைவர் என்ற ரீதியில் அவரிடம் இருந்து எந்த வழிகாட்டுதல்களையும் பெறவேண்டாம் என்று கட்சியின் பதில் பொதுச் செயலாளர் மற்றும் ஏனைய கட்சி நிர்வாகிகளுக்கும் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு கடந்த வியாழனன்று இரண்டாவது தவணைக்கு எடுக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்ட போதும், கட்சித் தவிசாளராக இயங்கிய மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக விடுக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவை நீதிமன்றம் விலக்க மறுத்துவிட்டது. அது மேலும் 14 நாள்களுக்கு நீடிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த வழக்குத் தொடர்பிலும், நீதிமன்ற உத்தரவு தொடர்பிலும், எதிராளி தரப்புகளுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருக்குமானால், அவற்றை எழுத்தில் சமர்ப்பிக்கும்படியும் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

ஆக, மனுதாரரின் விண்ணப்பம், எதிராளிகளின் ஆட்சேபனை, மனுதாரர் தரப்பு பதில் மனு போன்றவற்றையெல்லாம் ஆராய்ந்த பின்னர், ஓர் இறுதி முடிவு எடுப்பதில் நீதிமன்றம் கரிசனையாக இருப்பதாகவே தெரிகின்றது. அதுவரையில் மைத்திரிக்கு எதிரான இடைக்காலத் தடை உத்தரவு 14 நாள்களுக்கு ஒரு தடவை நீடிக்கப்படும் சூழ்நிலையே தென்படுகின்றது.

நீதிமன்றின் இடைக்காலத் தடையால் மைத்திரிக்கு தற்காலிகமாக அதிகாரம் இல்லை என்பதை வைத்து, சந்திரிகா தரப்பு கட்சியின் பதில் நிர்வாகம் ஒன்றை உருவாக்கி இருக்கின்றது.

இதுவரை கட்சியின் பதில் பொதுச் செயலாளராகப் பணியாற்றி வந்தவர் அந்தப் புதிய நிர்வாகத்தை சட்டரீதியானது என்று ஏற்க முடியாது என்று தெரிவித்துவிட்டார்.

இனி, நீதிமன்றம்தான் விசாரணை நடத்தி முடிவு கட்ட வேண்டும்.

அதுவரைக் காத்திருக்க முடியாத இருதரப்புகளும், ஒன்றையொன்று முந்தும் நோக்கோடு தத்தமது நியாயங்கள் சகிதம் தேர்தல் ஆணைக்குழுவை நாடி இருக்கின்றன.

ஆனால், தேர்தல் ஆணையம் இதற்குள் தனது தலையைக் கொடுத்து மாட்டிக் கொள்ளத் தயார் இல்லை என்றே தெரிகின்றது.

'அழுதும் அவளே பிள்ளை பெற்றுக் கொள்ள வேண்டும்' என்ற மாதிரி, 'இது உங்கள் உள்கட்சிப் பிரச்சினை, நீங்களே தீர்த்துக் கொண்டு வாருங்கள், இதற்கு நடுவில் நாம் தலையிட்டுத் தீர்ப்புக் கூற முடியாது' என்ற போக்கில் தேர்தல் ஆணைக்குழு கை விரித்து விட்டதாகவும் தகவல்.

விவகாரம் நீதிமன்றத்தில் இருப்பதால், அதற்கு முன்னர் தான் தலையிட்டு, ஒரு பக்கத்தை அங்கீகரித்து ஏற்று, இன்னொரு தரப்பை நிராகரித்துத் தேர்தல் ஆணையம் முடிவு எடுக்காது என்பது திண்ணம்.

ஒன்றில் கட்சிக்குள் நீங்கள் ஒன்றிணைந்து ஒன்றுபட்டு ஒரு முடிவுடன் வாருங்கள் அல்லது நீதிமன்றுக்கு போய் ஒரு முடிவை - தீர்ப்பை - பெற்று வாருங்கள் என்று தேர்தல் ஆணையம் சம்பந்தப்பட்ட இருதரப்புகளுக்கும் கோடி காட்டிவிட்டது என்றும் கூறப்படுகிறது.

இந்தச் சிக்கலுக்கு நீதிமன்றத்தில் ஒரு முடிவு எட்டப்படுவதற்கு இடையில், அதற்குக் காலம் இழுபட்டு, அதற்கு மத்தியில் தேர்தல் ஒன்று அறிவிக்கப்படுமானால், அச்சமயத்தில் கட்சியின் உண்மையான நிர்வாகிகள் யார் என்பதைத் தீர்மானித்து, அத்தரப்புடன் ஊடாட வேண்டிய நெருக்கடி தேர்தல் ஆணையத்துக்கு ஏற்படும்.


அதுவரையில் எந்தப் பக்கமும் சாராமல், விவகாரத்தை நீதிமன்றத்தில் தீர்த்து வரும் வரை, தேர்தல் ஆணையம் கைய வீசிக் கொண்டு சும்மா பார்த்துக் கொண்டு தான் இருக்கும்.

சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரை இனி எல்லாம் நீதிமன்றத்தின் முடிவில் தான் அல்லது வழிகாட்டலில் தான் தங்கி உள்ளது.

## இந்திய மக்களவைத் தேர்தல்:

# 102 தொகுதிகளில் 60 வீத வாக்குப்பதிவு



இந்திய மக்களவை தேர்தலின் முதற்கட்ட வாக்குப்பதிவு 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 102 தொகுதிகளில் நேற்று நடைபெற்றது.

544 தொகுதிகளைக் கொண்ட இந்திய மக்களவை தேர்தலில் நேற்று 102 தொகுதிகளில் மாத்திரம் வாக்குப்பதிவு முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்நாடு, அருணாச்சலப் பிரதேசம், அசாம், பீகார், சத்தீஷ்கர், மத்திய பிரதேசம், மகாராஷ்ட்ரா, மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, ராஜஸ்தான், சிக்கிம், திரிபுரா, உத்தரப் பிரதேசம் , உத்தராகண்ட், மேற்குவங்கம் உள்ளிட்ட மாநிலங்களிலும் புதுச்சேரி, அந்தமான், நிக்கோபார், ஜம்மு – காஷ்மீர், இலட்சத்தீவு ஆகிய யூனியன் பிரதேசங்களிலும் வாக்குப்பதிவு இடம்பெற்றது.

நேற்று காலை 7 மணிக்கு முதலாம் கட்ட வாக்குப் பதிவுகள் ஆரம்பமாகின.

அரசியல் தலைவர்கள், சினிமா பிரபலங்கள், பொதுமக்கள் என பலரும் வரிசைகளில் காத்திருந்து தமது ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றினர்.

இம்முறை தேர்தலில் தமிழகத்தில் சுமார் 6 கோடியே 23 இலட்சம் பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர்.

இவர்களுள் 10.92 லட்சம் பேர் முதன்முறையாக வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாலை 5 மணி வரையான நிலவரப்படி, 60 வீத வாக்குப்பதிவு இடம்பெற்றுள்ளது.

இந்திய மக்களவை தேர்தலின் இரண்டாம் கட்ட வாக்குப் பதிவு எதிர்வரும் 26 ஆம் திகதி 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் அடங்கலாக 89 தொகுதிகளில் நடைபெறவுள்ளது.

ஜூன் மாதம் முதலாம் திகதி 7ஆம் கட்ட தேர்தல் நடைபெற்று வாக்கு எண்ணிக்கை ஜூன் மாதம் 4 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன என இந்திய தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

# தமிழகத்தில் அமைதியாக இடம்பெற்ற வாக்குப்பதிவு



தமிழகத்தின் 39 தொகுதிகளிலும் அமைதியான முறையில் நடந்த மக்களவைத் தேர்தலில், நேற்று இரவு 7 மணி நிலவரப்படி 72.09 வீத வாக்குகள் பதிவாகின.

தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பிரச்சினைகள் ஏற்பட்டாலும், பெரிய அளவிலான அசாம்பவித சம்பவங்களின்றி வாக்குப்பதிவு நிறைவடைந்தது.

மின்னணு வாக்குப் பதிவு இயந்திர கோளாறு காரணமாக வாக்குப்பதிவு சில இடங்களில் தாமதாக தொடங்கப்பட்டது. சில இடங்களில் வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் விடுபட்டுள்ளதாக குற்றம்சாட்டப்பட்டது போன்ற சில சலசலப்புகள் மட்டுமே ஏற்பட்டது.

ஒட்டுமொத்தமாக, தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு அமைதியாக நடந்து முடிந்துள்ளது.

# கென்யா பாதுகாப்புப் படையின் தலைவர் விபத்தில் உயிரிழப்பு



கென்யாவின் பாதுகாப்புப் படைத் தலைவர் ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி கென்யாவின் மேற்குப் பகுதியில் விபத்துக்குள்ளான ஹெலிகொப்டரில் ஜெனரல் பிரான்சிஸ் ஓமண்டி ஓகொல்லா மற்றும் 11 பேர் பயணம் செய்தனர் என அந்த நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், ஜெனரல் பிரான்சிஸ் கென்யாவின் மிக உயர்ந்த இராணுவ அதிகாரி என்றும் கென்யாவிற்கு இந்த நிகழ்வு மிகவும் சோகமான தருணம் எனவும் கென்யா ஜனாதிபதி வில்லியம் ரூட்டோ குறிப்பிட்டுள்ளார்.

# மத்திய கிழக்கில் யுத்த நெருக்கடி: ஈரானில் கேட்கும் வெடிச்சத்தங்கள்







மத்திய கிழக்கு வலயம் தொடர்பில் தற்போது முழு உலகின் கவனமும் திரும்பியுள்ளது.

ஈரானின் இஸ்பஹான் நகரில் வெடிச் சம்பவங்கள் கேட்டன என வெளியாகும் தகவல்களையடுத்து, இந்த நிலைமை தீவிரமடைந்துள்ளது.

இஸ்ரேல், ஈரான் மீது ஏவுகணைத் தாக்குதல் மேற்கொண்டதாக அமெரிக்க அதிகாரிகளை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும், தமது நாட்டில் எந்தவொரு பகுதி மீதும் வான் தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லைஎனஈரானின்தேசியசைபர் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சூழ்நிலையிலேயே தேசிய பாதுகாப்பு பேரவை இன்று அவசரமாக கூடியுள்ளது.

மத்திய, கிழக்கு வலயத்தில் அபாயத்தை தோற்றுவிக்கும் வகையில், தற்போது இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான நெருக்கடி யுத்தமாக திரிபடைந்து வருகின்றது.

வான் பரப்பு ஊடாக மேற்கொள்ளப்படும் ட்ரோன், ஏவுகணைத் தாக்குதல்கள் ஈரானிலிருந்து இஸ்ரேலுக்கும் இஸ்ரேலிலிருந்து ஈரானுக்கும் மேற்கொள்ளப்படுவதாக அறியக்கிடைக்கின்றது.

கடந்த ஒக்டோபர் மாதம் இஸ்ரேல் மீது பாலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னர் தீவிரம் பெற்ற காஸா நெருக்கடியினை அடுத்தே, ஈரான் – இஸ்ரேல் மோதல் மத்திய கிழக்கு வலயத்தில் யுத்த அபாயத்தை தோற்றுவித்துள்ளது.

ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் நிலவிய பனிப்போர் தற்போது அம்பலத்திற்கு வந்துள்ளது.

இஸ்ரேல் மீது ஈரான் நேற்று ஏவுகணைத் தாக்குதல் மேற்கொண்டமையை அமெரிக்காவின் பாதுகாப்பு பிரிவு உறுதிப்படுத்தியுள்ளதாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மத்திய, கிழக்கு வலயத்தில் நெருக்கடியை மேலும் அதிகரிக்கும் வகையில், கடந்த ஏப்ரல் 13 ஆம் திகதி ஈரானால் இஸ்ரேலின் டெலிஷ் நகருக்கு ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த ஏப்ரல் முதலாம் திகதி சிரியாவின் டமஸ்கஸ் நகரிலுள்ள ஈரான் தூதரகத்தின் மீது இஸ்ரேல் மேற்கொண்ட குண்டுத்தாக்குதலுக்கு பதிலளிக்கும் வகையில் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்த தாக்குதலில் இஸ்லாமிய புரட்சி பாதுகாப்பு படையணியின் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் இருவரும் ஐந்து ஆலோசகர்களும் கொலை செய்யப்பட்டனர் என ஈரான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

அதற்கு முன்னரும் இஸ்ரேலில் ஈரானின் உயர் அதிகாரி ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதலில் அவர் கொலை செய்யப்பட்டிருந்தார்.

அதன் பின்னர் சிரியாவின் தலைநகர் டமஸ்கஸில் பணியாற்றிய ஈரானிய ஜெனரலான ராசி முஸாவி, இஸ்ரேலின் வான் தாக்குதலினால் உயிரிழந்தார் என ஈரானின் அரச ஊடகம் அறிவித்திருந்தது.

எனினும், கடந்த ஏப்ரல் முதலாம் திகதி சிரியாவின் டமஸ்கஸ் நகரில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னர் இஸ்ரேலுக்கு எவ்வித மன்னிப்பையும் வழங்குவதில்லை எனவும் அந்த தாக்குதலுக்கு பதில் தாக்குதல் மேற்கொள்வதாகவும் ஈரான் நேரடியாக அறிவித்ததுடன், இந்த அறிவிப்பு ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான மோதலை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

இந்த பின்புலத்தில் கடந்த 13ஆம் திகதி ஈரான் முதற்தடவையாக இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது.

அதற்கமைய, ஈரான் அண்மையில் இஸ்ரேல்மீதுமேற்கொண்டதாக்குதலுக்கு பதிலளிக்கும் வகையில், இஸ்ரேல் ஈரானின் இஸ்பஹான் நகரை அண்மித்த பகுதியில் நேற்று அதிகாலை ஏவுகணை தாக்குதல் மேற்கொண்டதாக அமெரிக்காவின் உளவுப் பிரிவை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும், இஸ்ரேல் பாதுகாப்பு தரப்பினர் இதுவரையில் இது தொடர்பில் எவ்வித கருத்துகளையும் வெளியிடவில்லை.

ஈரான் – இஸ்ரேல் மோதல் இவ்வாறு வலுப்பெறும் போது, இஸ்ரேல் ஈரானின் தலைநகரான தெஹ்ரானுக்கு பதிலாக இஸ்பஹான் நகர் மீது ஏவுகணை தாக்குதல் மேற்கொண்டமையால், முழு உலகமும் மத்திய கிழக்கு வலயம் தொடர்பில் பார்வையை திருப்பியுள்ளன.

ஈரானின் மிகப்பெரிய விமான படைத் தளம், யுரேனியம் உற்பத்தி நிலையம், ஏவுகணை முகாம், எரிபொருள் உற்பத்தி, யுரேனியம் ஆய்வுக்கூடம், சேர்கோனியம் உற்பத்தி நிலையம் என்பன இஸ்பஹான் நகரை கேந்திரமாகக் கொண்டே அமைந்துள்ளன.

ஈரானின் இஸ்பஹான் சர்வதேச விமான நிலையத்தை அண்மித்த பகுதி மற்றும் இஸ்பஹான் நகரின் கிழக்கு பிரதேசம் மீது இந்த ஏவுகணை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டதன் பின்னர் ஈரானின் விமான பாதுகாப்பு கட்டமைப்பு செயற்படுத்தப்பட்டுள்ளதுடன், இதுவரையில் அந்த இடங்களில் வெடிப்புகளினால் ஏற்பட்ட சேத விபரம் தொடர்பில் எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை என ஈரான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்பஹான் நகரில் கேட்ட இந்த வெடிப்பு சத்தம் சந்தேகத்திற்கு இடமான பொருளொன்றின் மீது விமான பாதுகாப்பு கட்டமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவம் என ஈரான் தெரவித்துள்ளது.

இஸ்பஹான் அல்லது நாட்டின் எந்தவொரு பிரதேசத்தின் மீதும் வான் தாக்குதல் மேற்கொள்ளப்படவில்லை என ஈரானின் தேசிய சைபர் பாதுகாப்பு கட்டமைப்பு தெரிவித்துத்துள்ளது.

சிலர் தமது வான் பரப்பில் ட்ரோன்களை பறக்கச் செய்வதற்கு முயற்சி செய்துள்ளதாகவும் அவ்வாறு அனுப்பப்பட்ட மூன்று ட்ரோன்களையும் சுட்டு வீழ்த்தியதாகவும் ஈரானின் தேசிய பாதுகாப்பு கட்டமைப்பு தெரிவித்துள்ளது.

எனினும், இஸ்ரேல் ஈரான் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக அமெரிக்கா நேற்று அறிவித்தது.

எவ்வாறாயினும்,தாக்குதலின்பின்னர் ஈரானின் தெஹ்ரான், சிராஸ் மற்றும் இஸ்பஹான் விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

இதேவேளை, சில சர்வதேச விமான நிறுவனங்கள் ஈரானுக்கான விமான சேவைகளை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதுடன், தமது விமான பயணப் பாதையையும் மாற்றியுள்ளன.




**உரலார் கேள்வி:- உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடந்து ஐந்து வருடங்கள் ஆகியும், அதுபற்றிய உண்மை இன்னும் வெளிவரவில்லையே?**

**உலக்கையார் பதில்:-** மக்களுக்காக அரசியல் என்பது போய் அரசியலுக்காக மக்கள் என்ற நிலை உருவாகியிருப்பது கவலைக்குரிய விடயம்.



எதைச் செய்தாயினும், எவரைப் பலி கொடுத்தாயினும், தம் நோக்கத்தை நிறைவேற்ற அரசியல்வாதிகள் தயங்கமாட்டார்கள் என்ற படுபயங்கரமான உண்மையை ஈஸ்டர் தாக்குதல் பகிரங்கப்படுத்தியிருக்கிறது. வரவர ஜனநாயகம் என்ற போர்வையில் உலகெங்கும் நடக்கத் தொடங்கியிருக்கும் பயங்கரவாதச் செயல்களின் அளவு கூடிக்கொண்டே இருக்கிறது. வழிபடச் சென்ற மக்களை, தம் நோக்கத்திற்காகச் சிலர் பலிக்கடாவாக்கிய அசுரத்தனத்தை ஐந்து வருடங்கள் என்ன ? ஐம்பது வருடங்களானாலும் இந்நாட்டு மக்கள் மறக்க மாட்டார்கள்.

நீதிக்கான கோரிக்கை நீண்டுகொண்டே போகிறது. ஆனால் நிச்சயம் அக்கோரிக்கை நிறைவேற்றப்படப் போவதில்லை. இதுவரை வெளிவந்த செய்திகளின்படி, பல 'பெரிய தலைகள்' இச்சம்பவத்தில் தொடர்புபட்டிருப்பது மட்டும் உறுதியாகியிருக்கிறது. அதனால் நிச்சயம் நீதி 'நேர்வழியாக' வெளிவரப் போவதில்லை. ஆனால் ஒன்று, நீதிக்கு அப்பால் தருமம் என்ற ஒன்று இருக்கிறது. அந்தத் தருமம் 'குறுக்கு வழியாக' உட்புகுந்தேனும் சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிக்காமல் விடாது என்று உறுதியாக நம்புகிறேன். சிலுவையில் அறையப்பட்டு உயிரிழந்த ஜேசு பிரான் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தது போல விரைவில் தர்மம் உயிர்த்தெழுவதை நாம் காணலாம்.

**சல்லடையார் சலிப்பு:- 'பரலோகத்தில் இருக்கும் பரம பிதாவே! பாவிகளை மன்னித்து விடாதீராக!.....'. 'ஆமென்'.**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி:- அண்மைக்காலமாக உங்களை மிகவும் சலிப்படையச் செய்யும் விடயம் எது?**

**உலக்கையார் பதில்:-** தமிழரசுக் கட்சியில் நடக்கும் பதவிப் போட்டிக்கு அப்பாலும் என்னைச் சலிப்படையச் செய்யும் ஓர் விடயம் இருக்கிறது. அதுபற்றிக் கொஞ்சம் சொல்கிறேன்.

முன்பொருமுறை சண் ரிவியில் வெளிவந்து கொண்டிருக்கும் 'எதிர் நீச்சல்' என்னும் தொடர் நாடகத்தைப் பற்றி 'ஆகா ஓகோ' என்று புகழ்ந்து நான் எழுதியது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். அந்த நாடகத்தின் தற்போதைய போக்குத்தான் என்னைச் சலிப்பின் உச்சம் வரை கொண்டு சென்றிருக்கிறது.

அந்த நாடக இயக்குநருக்குக் கிரக மாற்றம் ஏதோ பிழைத்திருக்கிறது போல. இல்லாவிட்டால் அவ்வளவு சுவையாகக் கொண்டு சென்ற நாடகத்தை இவ்வளவு மோசமாக இழுத்தடிப்பாரா? 'எதிர் நீச்சல்' என்கின்ற நாடகத்தின் தலைப்பும் அதன் ஆரம்பக் கதைப் போக்கும் ஏதோ பெண் விடுதலையை எடுத்துக்காட்டப் போகிறது என்ற நினைப்பைத் தந்து விறுவிறுப்பூட்டியது. ஆனால் இன்றுவரை அதன் கதாநாயகிகள் ஆண்களை எதிர்த்து ஒரு வெற்றியைக்கூடப் பெற்றதாய்க் காட்டப்படாதது எரிச்சலூட்டுகிறது.

அந்த நாடகத்தில் படுபயங்கரமான வித்தியாசமான வில்லனாக வந்து 'ஸ்கோர்' பண்ணிய நடிகர் மாரிமுத்து மாரடைப்பால் இறந்துபோனதோடு, பெரும்பாலும் அந்த நாடகமும் இறந்து போனது என்றே சொல்ல வேண்டும். தற்




போது அவருக்குப் பதிலாக வந்திருக்கும் வில்லன் நடிகரோ நம்பியார், வீரப்பா போன்றோரின் வரிசையில் ஒருவராகத்தான் இருக்கிறார். அவர் கத்துகிற கத்தில் நம் காதும், கதையும் வீணாகக் கிழிகின்றன.

இலக்கண நூல்கள் மற்றொன்று விரித்தல் எனும் குற்றம் பற்றிச் சொல்கின்றன. மற்றொன்று விரித்தல் என்பதற்கு எடுத்துக் கொண்ட விடயத்தை விட்டுவிட்டு ஏதேதோ விடயங்களைப்

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

'பதற்றுவது' என்பதே அர்த்தமாகும். 'எதிர் நீச்சலிலும்' அதுதான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. இவ்வளவு சுவையாக நாடகத்தைக் கொண்டுபோன ஒரு இயக்குநர் இவ்வளவு மோசமாக அந்த நாடகத்தை இழுத்தடிப்பாரா? என்று எண்ண வேண்டியிருக்கிறது. எவ்வளவுதான் எதிர் நீச்சல் போட்டாலும் இனி 'எதிர்நீச்சல்' எழும்பப் போவதில்லை. எவ்வளவு சீக்கிரம் இந்த நாடகம் முடியும் என்ற எதிர்பார்ப்போடுதான் இப்போது தொலைக்காட்சி ரசிகர்கள் காத்திருக்கிறார்கள்.

**சல்லடையார் சலிப்பு:- காலம் பிழைத்தால் கதையும் பிழைக்குமோ ?**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி:- என்ன? தமிழ்நாட்டில் தேர்தல் தொடங்கிவிட்டதே! உங்களது அண்ணாமலையாரது கதை என்னாகப் போகிறது?**

**உலக்கையார் பதில்:-** அண்ணாமலையை எனக்குக்கூடச் சொந்தமாக்கிவிட்டீர்களா? உங்களது 'குசும்பு' புரிகிறது. சரி விடயத்திற்கு வருவோம்.

இம்முறை தேர்தலில் தற்போதைய ஆளும் கட்சிதான் பெரும்பாலும் ஆட்சியைப் பிடிக்கும் என்று கருதுகிறேன். ஆனாலும் தான் நிற்கும் தொகுதியில் அண்ணாமலை வெற்றி பெற வாய்ப்பு இருக்கிறது. வெற்றியோ, தோல்வியோ? அண்ணாமலை ஏற்கனவே பெரும் வெற்றி



களைப் பெற்றுவிட்டார். அது என்ன வெற்றிகள் என்று கேட்பீர்கள் சொல்கிறேன்.

- மிகக் குறுகிய காலத்தில் தனது ஆளுமையால் தன்னையும், தனது கட்சியையும் தமிழ்நாட்டுக்குள் பிரபல்யப்படுத்தியதில் அவர் பெற்றிருக்கும் வெற்றி அவரது முதல் வெற்றி.
- ஒரு திராவிடர் கழகத்திற்கு, மற்றொரு திராவிடர் கழகம்தான் எதிரணியாக இருக்க முடியும் என்ற வரலாற்றை மாற்றி, அத்தனை கட்சிகளையும் தன்னை நோக்கித் திருப்ப வைத்தது அவர் பெற்ற இரண்டாவது வெற்றி.
- அ.தி.மு.க. உடனான கூட்டு தன் கட்சிக்குப் பெரிய வாய்ப்பைப் பெற்றுத்தரும் என்பதைத் தெரிந்து கொண்டும் தன் கட்சியின் சுயம் பேணுவதற்காய் அ.தி.மு.க.வுடனான உறவை முறித்துக் கொண்டது அவர் பெற்றிருக்கும் மூன்றாவது வெற்றி.
- பெரும்பான்மையான கட்சிகள் தமக்கு வாக்களிக்கவெனச் சட்டத்தை மீறி மக்களுக்குப் பணம் 'பட்டுவாடா' செய்து கொண்டிருக்கும் நிலையில் 'எங்கள் கட்சிக்கு வாக்களிக்கவென ஒரு சதத்தைத்தானும் தரமாட்டேன்' என்று கூறிய அவரது உறுதிச் செயல் அவர் பெற்றிருக்கும் நான்காவது வெற்றி.
- ஊடகக்காரர்களுடன் ஒத்துப் போனாற்தான் தேர்தலில் வெற்றி பெறலாம் என்ற சூழ்நிலை இருக்கையில் சில அராஜகமான ஊடகக்காரர்களைச் சிறிதும் அச்சமின்றித் துவைத்தெடுத்த செயல் அவர் பெற்றிருக்கும் ஐந்தாவது வெற்றி.
- பாரதப் பிரதமரின் கவனத்தை முற்று முழுதாகத் தமிழின் மீதும், தமிழ்நாட்டின் மீதும் திசை திருப்பியிருப்பது அவர் பெற்ற ஆறாவது வெற்றி.
- எம்.ஜி.ஆருக்குப் பிறகு மக்களின் கருத்தை முழுமையாக ஈர்த்திருப்பது அவர் பெற்றிருக்கும் ஏழாவது வெற்றி.
- எம்.ஜி.ஆரின் வெற்றிக்குக் கூட அவரது சினிமாப்பலம், அவர் அதுவரை பயணித்த கட்சியினால் வந்த ஈர்ப்பு என்பவை துணையாய் நின்றன. ஆனால் எங்கிருந்தோ திடீரென வந்து தன் தனிச்செயற்பாட்டால் இத்தனை பேரை ஈர்த்திருப்பது அவருக்குக் கிடைத்திருக்கும் எட்டாவது வெற்றி.
- எந்தவித பிரதியுபகாரமும் பெற்றுக் கொள்ளாமல் இலட்சக்கணக்கான இளைஞர்கள் அவரதும், அவரது கட்சியினதும் வெற்றிக்காக உழைக்க முன்வந்திருப்பது அவர் பெற்றிருக்கும் ஒன்பதாவது வெற்றி.
- தமிழ் நாட்டு அரசியலில் பல காலமாய்க் காணாமல் போயிருந்த சத்தியம், தர்மம், நேர்மை என்பவற்றை மீண்டும் மக்களுக்குத் தரிசனப்படுத்தியது அவர் பெற்றிருக்கும் பத்தாவது வெற்றி.
- 'அரசியல் இல்லாமல் போனால் ஆடு மேய்க்கப் போவேன்' எனக்கூறி வேண்டாமை எனும் விழுச் செல்வம் பெற்று நிமிர்ந்திருப்பது அவர் பெற்றிருக்கும் பதினோராவது வெற்றி.
- திராவிடர் கழகங்களை எதிர்க்கப் பயந்து வாய்மூடி இருந்த பலரைப் பொது மேடையில் துணிந்து வாய்திறக்கச் செய்திருப்பது அவர் பெற்ற பன்னிரண்டாவது வெற்றி.

– இப்படியாய் அவர் பெற்றிருக்கும் வெற்றிகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இந்த வெற்றியோடு ஒப்பிடும் போது, வரப்போகும் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப் போகும் வெற்றி மிகச் சிறியதென்றே கருதுகிறேன்.

**சல்லடையார் சலிப்பு:- வல்லவன் நல்லவனாய் இல்லை. நல்லவன் வல்லவனாய் இல்லை. இரண்டுமாய் அண்ணாமலை இருப்பது அதிசயம்தானுங்கோ!**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி:- என்ன? ஈரானின் இஸ்ரேல் மீதான தாக்குதலோடு மூன்றாம் உலக யுத்தம் தொடங்கிவிட்டதாகச் சொல்கிறார்களே ?**

**உலக்கையார் பதில்:-** உண்மைதான் மூன்றாம் உலகயுத்தத்தின் சாரல்கள் எப்போதோ தொடங்கி விட்டன. இஸ்ரேல் மீதான ஈரானின் தாக்குதல்கள் அச்சாரல்களை மழைத்துளியாக்கியிருக்கிறது. இத் தாக்குதலில் அமெரிக்கா காட்டும் மௌனம் அச்சத்தை ஊட்டுவதாய் இருக்கிறது. விரைவில்



இம் மழைத்துளி பெருத்துக் காட்டு மழை பொழிந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. எதற்கும் எல்லோரும் தயாராய் இருப்போம்.

**சல்லடையார் சலிப்பு:- 'கெட்ட போரிடும் உலகினை வேரொடு சாய்ப்போம்.'**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦





# யாழ். பல்கலைக்கழகத்திலும் நேற்று அன்னை பூபதியின் நினைவேந்தல்

இந்தியப் படைகளின் அத்துமீறிய செயற்பாடுகளிற்கு எதிராக உண்ணாவிரதமிருந்து தன்னுயிர் நீத்த தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நினைவேந்தல் நிகழ்வுகளின் போது பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பெருந்திரளானவர்கள் பங்கு கொண்டு அன்னை பூபதிக்கு தங்கள் புகழ் வணக்கங்களைச் செலுத்தியிருந்தனர்.


















# கிழக்குப் பல்கலையில் உணர்வுடன் அன்னை பூபதியின் நினைவேந்தல்!

இந்திய இராணுவம் தமிழர் தாயகத்தில் வலிந்து திணித்துக் கொண்டிருந்த போரை நிறுத்த வலியுறுத்தி உண்ணாநோன்பிருந்து தன்னுயிர் நீத்த தியாகதீபம் அன்னை பூபதியின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களினால் பல்கலைக்கழக வளாகத்தில் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக முன்றிலில் அன்னை பூபதியின் நினைவேந்தி மாணவர்களினால் பொதுமக்களிற்கு தாகசாந்தி வழங்கப்பட்டதோடு, பல்கலைக்கழக பொங்குதமிழ் பிரகடன தூபியில் அமைக்கப்பட்டிருந்த அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலிகள் செலுத்தி மாணவர்களினால் நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.










# மட்டு. நாவலடியில் உணர்வுபூர்வமாக நேற்று அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வு



(பழுவூரான்)

தமிழ் மக்களின் விடிவுக்காக உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த அன்னை பூபதியின் 36 ஆவது நினைவு தினததினை முன்னிட்டு மட்டக்களப்பு நாவலடியில் அமைக்கப்பட்டுள்ள அன்னை பூபதியின் நினைவிடத்தில் நேற்றய் வெள்ளிக்கிழமை நினைவஞ்சலி உணர்வு பூர்வமாகச் செலுத்தப்பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வாக திருச்செந்தூர் முருகன் ஆலயத்திலிருந்து அன்னை பூபதியின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி ஊர்வலம் இடம்பெற்றது.

ஊர்வலம் புதுமுகத்துவாரம் ஊடாக நாவலடியிலுள்ள அன்னையின் நினைவிடத்தைச் சென்றடைந்தது.

அதனைத் தொடர்ந்து அன்னை பூபதியின் இரு மகள்களும் இணைந்து தீபச்சுடரை ஏற்றினர். அத்தோடு அன்னையின் சமாதிக்கு முக்கிய பிரமுகர்கள் மலர்மாலை அணிவித்தும், மலர் தூவியும் அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், எஸ்.ஸ்ரீநேசன், மட்டக்களப்பு மாநகர முன்னாள் முதல்வர் தியாகராஜா சரவணபவன், முன்னாள் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர்கள்,அதிபர் தர்மலிங்கம் சுரேஸ்,சமூக செயற்பாட்டாளர் எஸ்.லவக்குமார்,வணபிதா ஜோசப்மேரி அடிகளார், தவத்திரு வேலன் சுவாமிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், அன்னை பூபதியின் குடும்ப உறவுகள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது அன்னை பூபதியின் 36 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அதிபர் தர்மலிங்கம் சுரேஷால் பிரகடனம் வாசிக்கப்பட்டது.

அன்னை பூபதி மட்டக்களப்பில், இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராக நீரை மட்டுமே அருந்தி, சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த பெண்மணி ஆவார்.

இவரது உண்ணாவிரதப் போராட்டம் 1988 மார்ச் 19ஆம் திகதி தொடங்கி சரியாக ஒரு மாதத்தின் பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டவாறே ஏப்ரல் 19ஆம் திகதி அவர் உயிர் துறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டு. நாவலடியில் உணர்வுபூர்வமாக நேற்று அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வு



# அன்னை பூபதித் தாய்க்கு நேற்று வவுனியாவிலும் நினைவேந்தல்




**(கே.வசந்தன்)**

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் அன்னை பூபதியின் 36 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் தமது பிள்ளைகளுக்கு நீதி கேட்டு 2616 ஆவது நாளாக வவுனியா, கண்டி வீதியில் உள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டப் பந்தலில் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது..

இதன் போது அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கு ஒளி தீபம் ஏற்றி மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. இதில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# முதல் ஆசிய தங்கப் பதக்க மெய்வல்லுநர் நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் காலமானார்



இலங்கையின் முன்னாள் மெய்வல்லுநர் ஜாம்பவான் நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் தனது 89 ஆவது வயதில் அமெரிக்காவில் காலமானார்.

உயரம் பாய்தல் வீரரான நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் 1952 மற்றும் 1956 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கை சார்பாக பங்கேற்ற பெருமையை பெற்றுள்ளார்.

1958 ஆம் ஆண்டு ஜப்பானில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு போட்டியில் உயரம் பாய்தலில் 1.95 உயரத்திற்கு ஆற்றலை வெளிப்படுத்தி புதிய சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார்.

இதன் மூலம் சர்வதேச மெய்வல்லுநர் அரங்கில் இலங்கைக்கு தங்கப்பதக்கம் ஈட்டிக்கொடுத்த முதல் வீரர் என்ற வரலாற்று சிறப்பும் நாகலிங்கம் எதிர்வீரசிங்கத்திற்கு உள்ளது.

1962 ஆம் ஆண்டு ஜகார்த்தாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு விழாவில் உயரம் பாய்தலில் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

யாழ்ப்பாணம் பெரியவிளானில் 1933 ஓகஸ்ட் 24 ஆம் திகதி பிறந்த இவர் யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவராவார்.

பாடசாலை பருவத்திலேயே உயரம் பாய்தலில் அகில இலங்கை சாதனையை முறியடித்த பெருமையும் அவருக்கு உள்ளது.

இலங்கை, சியேரா லியோன், பப்புவா நியூ கினியா, நைஜீரியா ஆகிய நாடுகளில் பல்கலைக்கழக விரிவுரையாளராக பணியாற்றியுள்ள நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் யுனெஸ்கோவிலும் 5 ஆண்டுகள் கடமையாற்றியுள்ளார்.




# சு.க. விவகாரம் தொடர்பில் விரைவில் கலந்துரையாடல்

## தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பில் விரைவில் கலந்துரையாடவுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இதுவரை இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை என அதன் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் இரு தரப்பினராலும் இதுவரை தமக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களையும் ஆணைக்குழுவில் முன்வைக்கவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் கடந்த சில தினங்களில் மேற்கொள்ளப்பட்ட நியமனங்களுக்கு எதிராக, கட்சியின் பதில் பொதுச் செயலாளரினால் தேர்தல்கள் ஆணைக்குழுவில் ஆட்சேபனை முன்வைக்கப்பட்டுள்ளது.

கட்சியின் யாப்பிற்கமையவே அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு சுட்டிக்காட்டியுள்ளதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் சாரதி துஷ்மந்த மித்ரபால தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் குழுவில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில், சுதந்திரக் கட்சியின் மற்றுமொரு குழுவினரும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவில் விடயங்களை முன்வைத்துள்ளனர்.

சுதந்திரக் கட்சியின் அரசியல் குழுவில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் மற்றும் புதிய நியமனங்கள் ஆகியன தொடர்பான விடயங்களே முன்வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளர் பதவியில் மைத்திரிபால சிறிசேன செயற்படுவதை தடுக்கும் வகையில் விதிக்கப்பட்ட தடையுத்தரவு மே மாதம் 09 ஆம் திகதி வரை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் நீடிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடியுள்ளதாக இலங்கை சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.

# இலங்கையின் நிதி ஸ்திரத்தன்மைக்கு ஆதரவு; உலக வங்கி பிரதிநிதி வாக்குறுதி வழங்கினார்





இலங்கை நிதித்துறையின் ஸ்திரத்தன்மைக்கு ஆதரவளிப்பதாக உலக வங்கி குழுமத்தின் தனியார் துறை பிரிவான சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய துணை தலைவர் Riccardo Puliti உறுதியளித்துள்ளார்.

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வொஷிங்டனில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியம் / உலக வங்கியின் வசந்த கால கூட்டத்தின் போது, இராஜாங்க நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க ஆகியோரை சந்தித்த போதே Riccardo Puliti இதனை தெரிவித்துள்ளார்.

தனியார் துறையின் ஈடுபாடு இலங்கையின் வளர்ச்சியை உயர்த்துவதற்கும் நெகிழ்ச்சியான எதிர்காலத்திற்கு வழி வகுப்பதற்கும் முக்கியமானது என சுஉைஉயசனழ தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அத்துடன், இரு தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடல் சிறந்த பரிமாற்றம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதி வசதி வழங்கும் வகையில், மூன்று தனியார் வங்கிகளின் ஊடாக இலங்கைக்கு 400 மில்லியன் அமெரிக்க டொலர் நாணய பரிமாற்ற வசதியை வழங்க சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் கடந்த ஆண்டு உறுதியளித்தது.

இலங்கையின் வளர்ச்சி மற்றும் பின்னடைவிற்கான தனியார் துறை ஈடுபாட்டின் முக்கியத்துவம் பற்றிய தெளிவுபடுத்தலுக்கு நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதன்போது நன்றி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உத்தியோகபூர்வ கடன் வழங்குனர்கள் குழுவின் இணைத் தலைவர் என்ற வகையில், இலங்கைக்கு ஜப்பான் தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என ஜப்பானின் சர்வதேச விவகாரங்களுக்கான பிரதி நிதி அமைச்சர் Fujii Daijo தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் சர்வதேச விவகாரங்களுக்கான பிரதி நிதி அமைச்சருக்கும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனை கூறியுள்ளார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான நட்புறவை மீண்டும் உறுதிப்படுத்திய Fujii Daijo, இலங்கை அடைந்துள்ள சிறந்த பொருளாதார முன்னேற்றத்தை பாராட்டியுள்ளார்.

கடன் மறுசீரமைப்பு முன்னேற்றம் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், கடன் மறுசீரமைப்பு செயல்முறையை விரைவில் நிறைவு செய்ய ஜப்பானின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு தொடர்பிலும் ஜப்பானின் சர்வதேச விவகாரங்களுக்கான பிரதி நிதி அமைச்சர் உறுதியளித்துள்ளார்.





# உலக வங்கியின் தெற்காசிய உப தலைவருடன் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சந்திப்பு

உலக வங்கியின் தெற்காசிய பிராந்திய உப தலைவர் மார்ட்டின் ரைஸருக்கும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் வொஷிங்டனில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

பொருளாதார மீட்சி மற்றும் நிதித் துறையின் ஸ்திரத்தன்மை போன்றவற்றில் இலங்கை அடைந்து வரும் முன்னேற்றத்தைக் கண்டு மகிழ்ச்சியடைவதாக மார்ட்டின் ரைஸர் இங்கு கூறியுள்ளார்.

வரி நிர்வாகம், நிதித்துறை, தனியார் முதலீடு மற்றும் வர்த்தகம், தொலைத்தொடர்பு, பெண்களை வலுவூட்டுதலுடன் சமூக பாதுகாப்பு ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய மறுசீரமைப்புகள் குறித்தும் இங்கு விவாதிக்கப்பட்டுள்ளது.



# தோட்டத்தொழிலாளர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1,700 ரூபாவை வழங்குமாறு வலியுறுத்தி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டம் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக நேற்று இடம்பெற்றது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக முற்பகல் 11 மணிக்கு இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்பித்திருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் ஏ.பி. சக்திவேல் உள்ளிட்ட கட்சியின் ஆதரவாளர்கள் பங்கேற்றனர்.

மலையகப் பகுதிகளிலிருந்து தோட்டத்தொழிலாளர்கள் கொழும்பிற்கு வரவழைக்கப்பட்டிருந்தனர்.

அனைவரும் கறுப்பு பட்டியணிந்து பதாகைகளை ஏந்திய வண்ணம் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.



# சுற்றுலாப் பயணிகளை ஏமாற்றுகின்ற உணவகங்களைத் தேடிச் சோதனை!

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஏமாற்றி உணவு விற்பனையில் ஈடுபடும் உணவகங்களைத் தேடி விரிவான சோதனைகளை மேற்கொண்டு வருவதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக காலி முகத்திடல், ஹிக்கடுவை, எல்ல போன்ற பகுதிகளை இலக்கு வைத்து இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஏமாற்றி வடை ஒன்றை 800 ரூபாவுக்கும், கொத்து ரொட்டியை 1,900 ரூபாவுக்கும் விற்பனை செய்ய முற்பட்ட சம்பவங்களைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.



# கோழி இறைச்சியின் விலை குறைகின்றது!

நாட்டில் ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின் விலை 150 ரூபாவினால் குறைவடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, எதிர்வரும் வாரங்களில் கோழி இறைச்சியின் விலை மேலும் குறைவடையக்கூடும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையத்தில் இன்று ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின் விலை 100 ரூபாவினால் குறைந்துள்ளது.



# இசைஞானி இளையராஜா இலங்கை வந்தடைந்தார்







பிரபல தென்னிந்திய இசையமைப்பாளர் இசைஞானி இளையராஜா கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக நேற்று நாட்டை வந்தடைந்தார்.

இன்று மற்றும் நாளை கொழும்பில் இடம்பெறவுள்ள மாபெரும் இசை நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காகவே அவர் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

முன்னதாக இந்த இசை நிகழ்ச்சி கடந்த ஜனவரி 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த நிலையில், இளையராஜாவின் புதல்வியும் பின்னணி பாடகியுமான பவதாரிணி உடல்நலக் குறைவால் உயிரிழந்தமையைத் தொடர்ந்து அந்த நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 20.04.2024

## மேஷம்

உங்கள் மனதிலிருந்து எதிர்மறை எண்ணங்களை நீக்காவிடில் உங்கள் வளர்ச்சி பாதிக்கும். மதிப்பு மிக்க பொருளை இழக்க வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உங்களுக்கு அசௌகரியமான உணர்வு காணப்படும். இதை அவருக்கு தெளிவாக உரைப்பது சிறந்தது.

இன்று சில நிதி கட்டுப்பாடுகள் காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை காண நீங்கள் உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

## ரிஷபம்

இன்ற உங்கள்ஆற்றலையும் வலிமையையும் உணரும் நாள்.இன்று உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். நீங்கள் பணிகளை திறம்பட கையாண்டு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று இருவரும் மனம் பொருந்தி ஒற்றுமையுடன் கானாப்படுவீர்கள். உங்கள் காதலின் எதிர்காலத்தை பற்றி கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. நீங்கள் எதிர்பாராத வகையிலிருந்து பணம் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.

## மிதுனம்

பிரச்சினை அல்லது மனக் குழப்பம் காரணமாக இன்றைய நாளை அனுபவிக்கும் மனநிலை உங்களிடம் இருக்காது. நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் பணிகளை திறம்பட மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காத காரணத்தினால் நீங்கள் ஏமாற்றமடைவீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதன் மூலம் நல்லுறவை வளர்ப்பீர்கள்.

இன்று கணிசமான தொகை சம்பாதித்தாலும் தவிர்க்கமுடியாத செலவுகள் காரணமாக நீங்கள் பணத்தை தக்க வைத்துக்கொள்ள இயலாது.

பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.

## கடகம்

இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.உரையாடலின் போது கவனமாக இருங்கள்.பயணங்கள் செய்ய வாய்ப்புள்ளது.

பணியிடத்தில் சிறப்பான பலன்களைக் காணலாம்.உங்களின் சிறிய முயற்சிகள் பெரும் வெற்றியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சில பயனுள்ள விஷயங்களைப் பேசுவீர்கள். என்றாலும் பேச்சு ஆக்கபூர்வமாக இருக்கும் வகையிலும் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கும் வகையிலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். உங்கள் குடும்பத்தோடு பயணம் செல்ல நேரலாம். அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.

## சிம்மம்

இன்று தடைகளையும் கஷ்டங்களையும் சமாளிக்க வேண்டியிருக்கும். நீங்கள் முயற்சி எடுத்தால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக வெற்றியை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்களின் அகந்தைப் போக்கு காரணம்மாக உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் துணையின் உணர்வுகளை கருத்தில் கொண்டு மதிப்பது நல்லது.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. கவனம் தேவை.

தேவையற்ற எண்ணங்கள் காரணமாக குழப்பம் மட்டுமன்றி தலைவலியும் ஏற்படும்.

## கன்னி

உங்கள் செயல்களை மேற்கொள்வதில் தடைகள் காணப்படும் ஒரு முடிவை செயலாக்குவதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும். தகவல் பரிமாற்றத்தில் குறைபாடு காணப்படும்.

சக பணியாளர்களுடன் சூடான விவாதங்கள் அல்லது அகந்தை உணர்வுகள் தலை தூக்கும். அத்தகைய சூழ்நிலையை நீங்கள் உருவாக்காமல் இருப்பது சிறந்தது.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

நிதி நிலைமை சாதகமாக இருக்காது. தேவையற்ற செலவுகளால் கவலை ஏற்படும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.

## துலாம்

இன்று இழப்புகள் ஏற்படாத வகையில் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். பொறுமையாக இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்களின் சில பணிகள் முடிக்கப் படாமல் இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் திறமையோடு முடிப்பதற்கு திட்டமிடல் அவசியம்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்டு சிறிது வன்மையாக நடந்து கொள்வீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்க்க வேண்டும்.

அதிக பொறுப்புகள் காரணமாக அதிக செலவுகள் காணப்படும். தேவையற்ற செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

வயிறு உப்பசம் காரணமாக அவதிப்பட நேரலாம்.

## விருச்சிகம்

இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி கிடைக்கும் நாள். உங்களின் நேர்மையான முயற்சி மூலம் உங்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை நீங்கள் உணரும் நாள். இன்று முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் செயல் திறனில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் தொடர்ந்து கடின முயற்சி செய்து உங்கள் திறமைகளை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு குறைந்து காணப்படும். இதனால் உறவில் திருப்தியான நிலை இருக்காது.

இன்று பணபுழக்கம் அதிகமாக காணப்படும். இந்தப் பணத்தை ஆடம்பரப் பொருள்கள் வாங்கப் பயன்படுத்தலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 20.04.2024

## தனுசு

இன்று முன்னேற்றகரமான பலன்கள் இருக்காது. உங்கள் மனக் குழப்பமும் வளர்ச்சியில் தடையை ஏற்படுத்தும். இது உங்களுக்கு பாதகமாக இருக்கும்.

பணியிடத்தில் திருப்திகரமான பலன்கள் காணப்படாது. அதிக வேலை காரணமாக உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட நேரலாம். எனவே இன்று மகிழ்ச்சியுடன் இருக்க நட்பான உறவை பகிர்ந்து கொள்வது நல்லது.

இன்று பணபுழக்கம் குறைவாக காணப்படும். உங்கள் பொறுப்புகள் அதிகமாக இருக்கும்.

## கும்பம்

இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடும் சூழல் ஏற்படும். இதனால் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். சமூக கூட்டங்களில் கலந்து கொள்வீர்கள். புதிய நண்பர்களை உருவாக்கிக் கொள்வீர்கள்.

வெற்றிகரமான பலன்களைக் காண கடினமாக உழைக்க வேண்டும். சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் வைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். கடன் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள் வலி ஏற்படலாம். தியானப் பயிற்சி மூலம் ஆறுதல் பெறலாம்.

## மகரம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். நம்பிக்கை நிறைந்து காணப்படும் நாள். கடின உழைப்புக்கு வெற்றி கிடைக்கும் நாள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் திருப்தியான சூழல் காணப்படும். கடினமான உழைப்பின் மூலம் நற்பெயரும் அதன் மூலம் நன்மதிப்பும் பெறுவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலையில் அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். அதிர்ஷ்டம் காரணமாக நிதிநிலையில் முன்னேற்றம் காணப்படும்.

## மீனம்

இன்று எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். புதிய மனிதர்களின் தொடர்பும் அதனால் நல்ல பயனும் கிடைக்கும். இதனால் உங்கள் தொடர்பு வட்டம் விரிவடையும். வாழ்க்கை உங்களுக்கு கவர்ச்சிகரமாக இருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக இன்று நீங்கள் பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணிகள் அதிகமாக இருக்கும். அவைகளை திறமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடும் விவாதங்களும் காணப்படும். இரவரும் நட்பு முறையோடு பழகுவீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை இன்று சுமாரான நாள். பண வரவிற்கும் சேமிப்பிற்கும் அதிர்ஷ்டம் குறைவான நாள்.




Discover the Ultimate Investment &
Dynamic Destinations
which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park